

Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண்49

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 1 ஆம் நாள் ஷவ்வால் பிறை 9 (12-2-65) வெள்ளிக்கிழமை இதழ் 4

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன் சொனென்ஷீன்

பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:

துரை அன் கோ

23/3 ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

மாணவர்களின் ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் உச்சநிலை அடைந்தது

இருமின்சார ரயில்களை எரித்து நாசமாக்கினர்!

பொலிஸாரின் குண்டுகளுக்கு மொத்தம் 23 மாணவர் பலி

ரயில்சேவை சீர்குலைவு; 1000 மாணவர் கைது

12 பகுதிகளுக்கு இராணுவம் அனுப்பப்பட்டது

சென்னை, பெப். 11

தமிழ் நாட்டில் ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் மாணவர்களின் வன்முறைச் செயல்களும் தீவிரமாக நடைபெற்றுள்ளன. நேற்றும் இன்றும் பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தியதில் மொத்தம் 23 மாணவர்கள் உயிரிழந்தனர். சுமார் 30 மாணவர்கள் காயமடைந்தனர்.

மாணவர்கள் இன்று இரண்டு மின்சார ரயில்களை தீ வைத்து நாசமாக்கினர் இந்தோ-இலங்கை கடுகதிரயிலைசேதமாக்கி ஆறுபிரயாணிகள் பெட்டிகளைத் தீக்கிரையாக்கினர். புகையிரதக் கடவைகளில் மாணவர்கள் தீ மூட்டினர். ரயில் பாதைகளை நாசமாக்கினர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக தமிழ் நாட்டில் இன்று ரயில் சேவைகள் முற்றாகச் சீர்குலைந்தன. கல்லூரிகள், பாடசாலைகள் இம்மாதம் முடியும்வரை மூடப்பட்டுள்ளன. இராணுவம் தமிழ் நாட்டின் 12 பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மின்சார ரயில்கள் நொறுங்கின

மாம்பலத்தில் மின்சார ரயில் ஒன்றுக்கு மாணவர்கள் தீ வைத்ததில் அது முற்றாக எரிந்து நசமானது. சேத்துப்பாளையத்தில் இரண்டு மின்சார ரயில்கள்மீது ஆர்ப்பாட்ட மாணவர்கள் கற்கள் வீசி அவற்றை நொறுக்கினர். நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் காரணமாக ரயில் சேவைகள் சீர்குலைந்தன. எழும்பூர் வந்து சேரவேண்டிய ரயில்கள் இன்று தாமதமாக வந்தன. எழும்பூரிலிருந்து ரயில் எதுவும் செல்லவில்லை சென்னையின் பல பகுதிகளில் மின்சார ரயில்கள் இன்று நிறுத்தப்பட்டன.

பஸ் சேவைகள் சீர் குலைந்தன

சென்னையின் பல பகுதிகளில் பஸ்சேவைகள் சீர்குலைந்தன. அரசாங்கத்துக்குச் சொந்தமான ஐந்து பஸ்களை மாணவர்கள் சேதப்படுத்தினர். இரண்டு பஸ்கள் முற்றாக தீக்கிரையானது இன்று பஸ் சேவைகள் இரவு 7-30க்கு மேல் நடைபெறவில்லை பஸ் சேவைகள் பொதுவாக இன்று பல பகுதிகளிலும் நிறுத்தப்பட்டன;

மாணவர்கள் 'கடத்தப்பட்டனர்'

வீதிகளில் சென்றுகொண்டிருந்த மாணவர்களும், கூட்டமாக நின்ற மாணவர்களும் இன்று பொலிஸ் வண்டிகளில் ஏற்றிச்செல்லப்பட்டனர். இவர்கள் பொலிஸ் நிலையங்களில் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். மாணவர்களை வீட்டை விட்டு வெளியே செல்லவேண்டாமென்றும் இது விஷயத்தில் பெற்றோர் கவனமாகவிருக்க வேண்டும் என்றும் பொலிஸ் பகுதி அறிவித்துள்ளது.

பொலிஸார் மாணவர் மோதல்

பல இடங்களில் பொலிஸாருக்கும் மாணவர்களுக்குமிடையே தீவைப்பு சம்பவங்கள் இன்று உச்ச கட்டத்தை அடைந்தன. இதன் விளைவாக போக்கு வரத்து சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

(6ம் பக்கம் பார்க்க)

களனியில் பொலிஸ் துப்பாக்கி பிரயோகம் இருவர் மாண்டனர்

கொள்ளுப்பிட்டி, வியா.

களனி புகையிரத நிலையத்தில் ரயில்களை போகவிடாமல் செய்த கும்பல் மீது இன்று காலை பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் ஸ்தலத்திலேயே மாண்டனர். பலர் காயமடைந்தனர். ஒரு கான்ஸ்டபிளும் புகையிரத தொழிலாளியும், பிரயாணி ஒருவரும் கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

களனியைச் சேர்ந்த கே. அல்பிரட்டும் (ஆறு குழந்தைகளின் தந்தை), ஆர். ஏ. ஷெல்ட்னுமே (அடுத்த மாதம் திருமணம் செய்யவிருந்தவர்) துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர்களாகும்.

களனி புகையிரத நிலையத்தில் கடுகதிப் புகையிரதங்கள் நிற்காததைக் கண்டு ஆத்திரமடைந்த ஒரு கும்பல், இன்று காலை தண்டவாளத்தின் மீது

(6-ம் பக்கம் பார்க்க)

"தமிழ்நாட்டுச்சம்பவங்கள் என் மனதை உருக்குகிறது

ஆங்கிலம் விரும்பும்வரை இருக்கும்: கிளர்ச்சியை நிறுத்துங்கள்"

—சாஸதிரி

புதுடில்லி, பெப் 11

ஹிந்தி பேசாத மக்களின் நலன்களைக் கவனிக்க, அவர்களுக்கு எதிரான பிரச்னைகளைத் தீர்த்துவைக்க அரசாங்கம் மிக்க ஆவல்கொண்டிருக்கிறதென்று இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி இன்றிரவு வானொலியில் விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

"ஹிந்தி பேசாத மக்கள் குறித்து நேரு அளித்த உறுதிமொழிகளை அரசாங்கம் தொடர்ந்து பற்றி நிற்கிறது ஆங்கில மொழியை, ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை உபயோகிக்கலாம், மத்திய அரசாங்கத்துடனான சகல தொடர்புகளையும் இவர்கள் ஆங்கிலத்தில் வைத்துக்கொள்ளலாம். இந்த வகையில் ஹிந்தி பேசாத மக்கள் மீது எந்தவிதத்திலும் ஹிந்தி திணிக்கப்படமாட்டாது. ஆங்கிலம் இணைப்பு மொழியாக துணைமொழியாக நீடித்திருக்கும்" என்றும் பிரதமர் சாஸ்திரி தெரிவித்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

முதற் பிரசாரக் கூட்டம்

வட்டுக்கோட்டைத் தொகுதி சுயேச்சை அபேட்சகர்

திரு. அ. தம்பிப்பிள்ளை

அவர்களை ஆதரித்து இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு அருகாமையில் நடைபெறும்.

திரு. ஏ. வி. குலசிங்கம்

அவர்களும் மற்றும் பலரும் பேசுவர்.

ஹிந்திகிளர்ச்சிஎதிரொலி: மந்திரிசுப்பிரமணியம்ராஜினமா!

புதுடில்லி, பெப். 11

இந்திய மத்திய உணவு, விவசாய மந்திரி திரு: ஸி: சுப்பிரமணியம் தமது பதவியை ராஜினமாச் செய்து விட்டதாக இன்றிரவு கடைசியாக எமக்குக் கிடைத்த செய்தியொன்று கூறுகிறது. தமிழ்நாட்டில் தற்பொழுது நடைபெறும் ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையுமே திரு. சுப்பிரமணியத்தின் ராஜினமாவுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இது குறித்து இந்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கவில்லை.

மணிவாக்கு

முடிவில் இன்பம்
கொடுக்கும் தொழிலைச்
செய்யும்போது துன்பம்
மிக வந்தபோதிலும்
துணிவு மேற்கொண்டு
செய்துமுடிக்கவேண்டும்.
—திருவள்ளுவர்.

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil
Daily. Post Box: 49, Jaffna.
Telegrams: 'EELANADU' Jaffna
Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
மாசி மீ 1 உ (12-2-65)

தமிழ்நாட்டில் மாணவர் கிளர்ச்சி

தமிழ்நாட்டில் மாணவர் ஆரம்பித்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பலாத்காரமாக மாறி பல இளம் உயிர்களைப் பலிவாங்கியதுடன் பெரும் பொருள் சேதத்தையும் ஏற்படுத்தியிருப்பது நிச்சயம் பலருக்கும் கவலையளிப்பதாகும்.

ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் தமக்குப்பிடிக்காத அரசாங்கத்தின் எந்த நடவடிக்கைக்கும் ஆட்சேபம் தெரிவிப்பதற்கு உரிமையுண்டு, ஆர்ப்பாட்டம் செய்வதிலும் தவறில்லை. ஆனால் ஆர்ப்பாட்டங்கள் அமைதியான முறையில் தமது எதிர்ப்பையும் தமது கருத்தையும் தெரிவிக்கக்கூடியதாக இருக்கவேண்டும், பொதுச்சொத்துகளுக்குச் சேதம் ஏற்படுத்தும் ஆர்ப்பாட்டங்கள், அவை நல்ல நோக்கத்துக்காக நடத்தப்படுவதாகவிருந்தாலும்கூட பொதுமக்களின் அனுதாபத்தையும், ஆதரவையும் பெற முடியாதுபோகும். அகிம்சையின் மூலம் அந்நிய ஆதிக்கத்தையே எதிர்த்து மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொடுத்த காந்திஜி அவதரித்த இந்திய நாட்டில் பலாத்காரச்செயல்கள் நடைபெறுவது நிச்சயம் இந்திய நாட்டுக்குப் பெருமைதராது.

காந்திஜியின் அகிம்சை நெறியைக் கடைபிடிக்க வேண்டிய அதேசமயம் காந்திஜியும் நேருஜியும் பேணிப் பாதுகாத்த தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவேண்டியது மத்திய அரசாங்கத்தினதும் ராஜ்ய அரசாங்கங்களினது கடமை மட்டுமல்ல; அரசியல், சமய, சமூகத் தலைவர்களினதும் முக்கிய கடமையாகும்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் செயல்கள்பற்றியும் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோக நடவடிக்கைகள்பற்றியும் விசாரணை செய்யப்படவேண்டியதுடன் இச்சம்பவங்களுக்கெல்லாம் அடிப்படை என்னவென்பதுபற்றியும் விசாரணை செய்து ஆராயவேண்டும், மீண்டும்இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமலும் தேசிய ஒருமைப்பாட்டைப்பாதுகாப்பதற்கான வழிவகைகளை அறிந்து, மொழிவெறிக்கு இடம் கொடாமல் நிதானமாக நடந்துகொள்வது இந்தியாவின் கௌரவத்தையும் மதிப்பையும் உயர்த்தும். மொழிக் கிளர்ச்சியையும் ஆர்ப்பாட்டங்களையும் ராணுவ பலத்தினால் அடக்கிவிடலாமென நினைப்பது சரியல்ல. தமிழ் நாட்டிலுள்ள சகல அரசியல், சமூக சமயத் தலைவர்களுடனும் பிரதமர் சாஸ்திரி நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி ஆலோசனை செய்வது தக்க பயனளிக்கலாம்.

மொழி உணர்ச்சியையும் தங்கள் ஆட்சேபத்தையும் தமிழ்நாட்டு மாணவர்கள் அதிகமாகவே காண்பித்துவிட்டார்கள். ராஜாஜி கூறுவதுபோல் அரசாங்கத்துக்கு அவகாசமளிக்கும்பொருட்டு சில காலத்துக்கு ஆர்ப்பாட்டங்களை ஒத்திவைப்பது மாணவர்களுக்குமட்டுமல்ல தமிழ் நாட்டுக்கே நியாயம் கிடைக்க வழிவகுக்கலாம்.

அடிமைத்தனத்தை ஒழித்த ஆபிரகாம் லிங்கன்

அவர் காட்டிய வழியை ஈழத்தமிழர் பின்பற்ற வேண்டும்

(ஆசீர்வாதம் ஹென்றி)

உலகில் மனிதன் தோன்றிய காலம் தொடக்கம் இன்றுவரையும் ஆங்காங்கே உலகின் பல பாகங்களிலும் பல மார்க்கஞானிகளும் பல அரசியல் தலைவர்களும் காலத்துக்குக்காலம் தோன்றி மனித சமுதாயத்திலே இருந்த பல தீய பழக்கவழக்கங்களையும் அநாகரிகச் செயல்களையும் மிகத்துணிவுடன் கண்டித்து ஒரு புனித உலகத்தையும் சுதந்திர, சமதர்ம மனித சமுதாயத்தையும் காண வேண்டுமென்ற பேராவலின் நிமித்தம் தம்மையே தியாகம் செய்து கொண்டார்கள் பல தலைவர்கள். அவ்வரிசையிலே தோன்றியவர்தான் அமெரிக்கா தந்த ஆபிரகாம் லிங்கன்.

ஆபிரகாம்லிங்கன் மிகஎளிய குடும்பத்திலே 1809-ம் ஆண்டு பெப்ரவரி மாதம 12-ம் திகதி பிறந்தார். எளிய குடும்பத்திலே தோன்றி எளிய சூழ்நிலையில் வளர்ந்தபோதிலும் மிக உயர்ந்த குணங்களும் பண்புகளும் நிறைந்து விளங்கினார். இளமையிலே ஒருநாள் நியூ ஓர்லியன்ஸ் பட்டணத்தில் அவர் கண்ட அடிமை வியாபாரச் சந்தை அவரைக் கலங்கடித்தது. பெண் அடிமைகள் சாட்டைகளால் அடிபடுவதை கண்டபோது அவருடைய உள்ளமே சம்மட்டியால் நொறுக்கப்படுவதுபோல் உணர்ந்தார். இந்த அமெரிக்க நாட்டினின்றும் ஒழியாதா இந்த அடிமை வியாபாரம் என்று ஏங்கியது அவரது இளகிய மனம். நீக்கிரோ மனிதனும் ஒரு மனிதன்தான் என்பதை ஒவ்வொரு அமெரிக்க மனிதனும் கண்டுணரும்வரை உழைத்தே தீர வேண்டும் என்று சபதம் செய்து கொண்டார். அவருடைய விடாமுயற்சியும் பேர்ஆர்வமும் அவரை ஒரு சிறந்த பேச்சாளராகச் செய்தது. தனது 24-வது வயதிலே சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

1857-ம் வருடத்தில் அதாவது தனது 50-ம் வயதில் செனட்சபைக்கு போட்டிப் பிரசாரம் செய்து வந்தபொழுது தனது சொற்பொழிவுகள் ஒன்றில் இந்த அமெரிக்க நாடு பாதி சுதந்திரமாகவும் பாதி அடிமையாகவும் இருக்க முடியாது. ஒருவீடு தனக்குத்தானே விரோதமாய் பிரியுமாகில் அந்தவீடு நிற்கமாட்டாதே. (மார்க்கவிஷேசம் 3-ம் அதிகாரம் 25-ம் வசனம் என்று யேசுபெருமானின் புனித வாக்கியத்தை எடுத்துக்காட்டி வீரகர்ஜனை செய்தார். "அப்படிப்பேசாதீர் நண்பரே தேர்தலில் தோல்வி அடைய நேரிடும் என" எச்சரித்தனர் நண்பர்கள். கடவுள் ஒருவர் இருக்கின்றார். அடிமை அநியாயத்தை அவர் வெறுக்கின்றார். மனிதன் சுதந்திரமாக வாழ்வது அவனது பிறப்புரிமை, புனிதஉரிமை, நிரந்தர உரிமை என்று பதில் விடுத்தார்.

1860-ம் வருடத்தில் ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். எசமான், அடிமைத்தனத்தை ஒழிப்பதற்காக அவர் தீவிரமாக உழைத்ததால் நாட்டில் பெரும் பிளவு ஏற்பட்டது. பல இன்னல்களுக்கிடையேயும் மிகத் துணிவுடன் நியாயத்திற்காக போர் புரிந்துவெற்றி பெற்றார். அகிம்சாமூர்த்தி மகாத்மாகாந்தி, அவனிபோற்றும் அண்ணல் மாவீரன்கென்னடி ஆகியோர் கொடியவெறியரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானது போல் ஆத்மஜோதி அணையாவிளக்கு ஆபிரகாம் லிங்கனும் ஜோன் வில்கஸ் என்ற கொடியவனால் சுட்டுவீழ்த்தப்பட்டார்.

மனிதன் தெய்வத்தின் சிறப்புப்படைப்பு. ஒருவன் எவ்வளவுதான் இழி குலத்திலே பிறந்தாலும் எந்த நிறத்தைச் சேர்ந்தவனாலும் கூன், குருடு, குரூபியாயிருந்தாலும் அவன் மனிதன் என்ற கௌரவத்திற்குரியவன், அந்த உரிமையை அரசோ, தனிப்பட்ட நிறுவனங்களோ அவனிடம் இருந்து பறிக்க முடியாது. அவனுக்கு பகுத்தறிவு உண்டு சுதந்திர சித்தமுண்டு. அழியாதஆன்மாவுண்டு. தெய்வச் சாயலுண்டு இதையாரும் மறுக்க முடியாது. இவ்வுண்மையை நிலைநாட்ட தன் உயிரையே தியாகம் செய்த ஆபிரகாம்லிங்கனுக்கு எமது வரலாற்றுமிக்க தமிழ்சமுதாயம் தன் நிலை கண்டு என்ன பதில் கூறும்.

எமது ஈழவளநாட்டின் சரித்திரப் புகழ்மிகு தமிழ் இனத்தின் மத்தியிலும் சிறுபான்மைத் தமிழர் என்று இருகூறுகளாகப் பிரிந்து செயல்பட ஆரம்பித்தால் அன்று ஆபிரகாம்லிங்கன் காட்டிய வீட்டின் உதாரணமே எமக்கும் ஏற்படும். அதனால் எமது தமிழ்பேசும் இனமே இலங்கையில் இருந்து முற்றாக பூண்டோடு அழிவதற்கே வழிவகுக்கும். தமிழ்பேசும் இனத்துக்கு இன்று தேவைப்படுவது சிங்கள மக்களுக்கு இருக்கும் சுதந்திரம் தமிழ்பேசும் இனமும் அனுபவிக்க வேண்டும் என்பதே. இவ்விலட்சியத்தை அடைவதற்கு ஆபிரகாம்லிங்கனின் இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ் பேசும் இனம் நீதிப்போர் கொடி உயர்த்தியிருக்கும் இவ்வேளையில் எமக்குள் நாமே ஒருபகுதி மக்களை தாழ்த்தப்பட்டவர்கள், ஹரிஜனங்கள், சிறுபான்மைத் தமிழர் என்று கூறி சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைப்பது நாகரீகமற்ற, காட்டுமிராண்டித்தனமான செயல் மட்டுமல்லாமல் தற்கொலைக்கு ஒப்பானதாகவே முடியும். பெருந்தன்மையுடன் தமிழ்மக்கள் தமக்குள் இருக்கும் தீண்டாமைப் பழக்கத்தைப் பூண்டோடு அழிக்க திடசங்கற்பம் செய்ய வேண்டும்.

இதேவேளையில் சிறுபான்மைத் தமிழன் என்று தம்மைத்தாமே தீவிரமாகக்கூறிக்கொண்டு தீண்டாமையை ஒழிக்காமலும் ஒழியவிடாமலும் தடைக்கல்லாக சிலர் இருக்கிறார்கள்.

சிறுபான்மைத் தமிழன் என்று கூறப்படும் மக்களுக்கு தேவைப்படுவது தீண்டாமை [illegible] அல்லது பாராளுமன்றத்தில் நியமன அங்கத்தவர் பதவியோ தீண்டாமையை ஒழித்துவிடாது, சுதந்திர இந்தியாவின் முதலாவது சட்ட மந்திரியாக பதவிவகித்தவர் ஒரு தாழ்த்தப்பட்ட மகனான டாக்டர் அம்பேத்கார் அப்படி இருந்துமே இன்றுவரையும் தீண்டாமை அங்கு முற்றாக ஒழியவில்லை.

"கங்கையைத் திருப்பமுடியாதா"

பரந்தன், வியாழன்

"மகாவலி கங்கையை வட மாகாணத்திற்குத் திருப்ப முடியுமென நான் கூறிவரும்போது சிலர் கேலிசெய்கிறார்கள். மகாவலிகங்கையை இப்பகுதிக்குத் திருப்பமுடியாதென என்னுடன் ஒரேமேடையில் யாராவது வாதாடி வெற்றிபெற்றால் நான் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளத் தயார்" என்று முரசுமோட்டை புளியடிச் சந்தியில் நேற்றிரவு நடைபெற்ற தமிழ்காங்கிரஸ் கூட்டத்தில் கிளிநொச்சித் தொகுதி தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் திரு வி. குமாரசாமி பேசும்போது கூறினார். இக்கூட்டம் திரு. க. பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

திரு. குமாரசாமி தொடர்ந்து பேசியதாவது:

மகாவலி கங்கையை வட பகுதிக்குத் திருப்புவது சாத்தியமானது. 50 லட்சம் ரூபா செலவில் இதைச் செய்து முடிக்கலாம். நான் இத்திட்டத்தை கடந்த 10 வருடகாலமாக கூறிவருகிறேன். 1956ம் ஆண்டு நான் வெற்றிபெற்றிருந்தால் நிச்சயம் மகாவலி கங்கையைத் திருப்பியிருப்பேன். இங்கு வந்த இஸ்ரேல் நிபுணர்கள்கூட மகாவலி கங்கையைத் திருப்பமுடியாதென கூறவில்லை. இஸ்ரேல் நாட்டில் கூட கடலில் செல்லும் நதியின் நீரை குழாய்கள் மூலம் பல முன்னேற்றத் திட்டங்களுக்குப் பயன்படுத்தியுள்ளனர். கம்யூனிஸ்ட் கட்சியினர்கூட இப்பொழுது மகாவலி கங்கையைத் திருப்பும்விஷயம் பற்றி அதிகம் பேசிவருகிறார்கள். இதனால் தமிழ்மக்கள் மட்டுமன்றி மத்திய மாகாணத்திலுள்ள சிங்கள மக்களும் பயனடைவார்கள். இத்திட்டத்திற்கு சிங்கள மக்களின் ஆதரவு கிடைக்காதென்று சிலர் கூறுவது அர்த்தமற்றது.

கிளிநொச்சி முன்னாள் எம். பி. திரு. ஏ. சிவசுந்தரம், திருவாளர்கள் அன்ரன க. பொன்னம்பலம், வ. சின்னத்துரை, அ. வேலாயுதம், நாகலிங்கம் ஆகியோரும் மற்றும் பலரும் பேசினர்.

"ஒரேமேடையில் தோன்றி கொள்கைகளை விளக்குவோம்"

சாவகச்சேரி தமிழரசு அபேட்சகர் யோசனை

சாவகச்சேரி, புதன்

"சமஷ்டி ஆட்சி கூடாது. ஒற்றை ஆட்சி தான் நன்மை பயக்குமென்று பலர் கூறுகின்றார்கள். இலங்கையிலே அந்த ஒற்றையாட்சி நிலவுகின்ற நேரத்திலே தான் ஈழத்துத் தமிழ்மக்களின் உரிமை பறிக்கப்பட்டது; தமிழ்ப்பகுதிகளில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது. நமது தமிழ்மொழி அழிக்கப்பட்டு சிங்களமொழி ஆட்சிக்கு வந்ததென்பது அவர்களுக்குத் தெரிந்திருக்காதா! எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழரின் உரிமையைத் தேசியக் கொடியிலே நிர்ணயிக்கவேண்டியநிலை ஏற்பட்டபோது ஒரு சிங்களக்கொடி தேசியக்கொடியாக வந்ததும் இந்த ஒற்றையாட்சிக் காலத்திலேதான். இந்த ஒற்றையாட்சி தான் தமிழினத்தின் அழிவுக்கு வழி வகுத்தது. உலகிலே ஒருமொழிக்கு மேற்பட்ட மொழிகள் பேசுகின்ற எந்த நாட்டிலும் கையாளப்படுகின்ற வெற்றிகரமான அரசியலமைப்பு சமஷ்டி அரசிலயமைப்பேஒழிய ஒற்றையாட்சி அல்ல" என்று மட்டக்களப்புதொகுதி தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு. செ. இராஜதுரை சாவகச்சேரித் தொகுதி அபேட்சகர் திரு. வ. ந. நவரத்தினத்தை ஆதரித்துகைதடி சந்திக்கருகாமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. அருளையா சின்னையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு இராஜதுரை மேலும் பேசுகையில் தமிழினம் தனது இழந்த உரிமைகளைப் பெறும்வரை இரத்தம் சிந்தவோ சிறைசெல்லவோ தமிழரசுக்கட்சி தயங்காதென்பதை ஆட்சியாளர்களுக்கு உணர்த்தியிருக்கிறது என்றும், சில சலுகைகளுக்காக அடிவருடிப் பதவிகளுக்காக எமது கொள்கையை விலைபேசமாட்டோம் என்றும் கூறினார்.

சாவகச்சேரித் தொகுதி அபேட்சகர் திரு. வ. ந. நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

"ஆட்சியில் இருக்கின்ற ஆளுங்கட்சியோடு கூட்டுச் சேர்ந்து எமது உரிமைகளைப் பெற்றுவிடமுடியாது. இதை எல்லாக் கட்சிகளும் உணர்ந்திருக்கின்றன. இந்த நிலையிலே தமிழினம் வீர உணர்ச்சி நிறைந்த தியாகமனப்பான்மையுள்ள தன்னலமற்ற தியாகிகள் ஒரு புனித போராட்டம நடாத்துவதன் மூலமே நாம் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். தேர்தல் காலங்களிலே மக்கள் தங்கள் வாக்குகளை செலுத்துவது உற்றாருக்கோ பெற்றாருக்கோ அல்ல, ஒரு புனிதமான இலட்சியத்தை வளர்ப்பதற்காக விடுதலை இயக்கத்தை வளர்ப்பதற்காக முன்வரவேண்டும்."

திரு. நவரத்தினம் மேலும் பேசுகையில் ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிடுகின்ற அபேட்சகர்கள் அனைவரும் தங்கள் தங்கள் தொகுதிகளிலேயே ஒரேமேடையில் தோன்றித் தங்கள் கொள்கைகளை மக்களுக்குத் தெளிவாக விளக்க முன்வரவேண்டும். அதேபோன்று நானும் என்னுடன் போட்டியிடும் தமிழ் காங்கிரஸ் அபேட்சகரோடு ஒரே மேடையில் தோன்றி எமது கொள்கைகளை விளக்கத் தயாராயிருக்கிறேன் என்று கூறினார்.

அகில இலங்கை திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு. இளஞ்செழியன் பேசுகையில் "தமிழ் மொழியின் தொன்மையை அதன் பாரம்பரிய பெருமையை அழிக்கமுயலுகின்ற சிங்கள அரசாங்கத்தை எதிர்த்து தமிழினத்தின் முன்னேற்றத்திற்காகவே தமிழரசுக்கட்சி போராடிவருகிறதென்றும் அப்படிப்பட்ட கட்சி தான் தமது உரிமைகளுக்காகப் போராடுகின்ற தமிழ்மக்களைத் தலைமைதாங்கி வழிநடத்தத் தகுதியானகட்சி" என்றும் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவே ஐந்தேகால் லட்சம் மலைநாட்டுத் தமிழரை வெளியேற்றும் ஒப்பந்தம் ஏற்பட்டதென்றார். தேர்தல் காலத்தில் மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சியுடன் செயலாற்றவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இந்தி எதிர்ப் ஆர்ப்பாட்டம்

-பொலிஸார் சுட்டதில் 19 மாணவர் மாண்டனர்

இரு பொலிஸ் அதிகாரிகளை மாணவர் உயிருடன் தீயிட்டனர்

தபால் நிலையம், பொலிஸ் நிலையம், ரயில் நிலையம் மீது தீ வைப்பு

பெருமளவில் மாணவர் கைது

சென்னை, பெப். 11

தமிழ்நாட்டில் மாணவர்கள் நடத்திவரும் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்றுப் பல இடங்களில் பலாத்காரச் சம்பவங்களை ஏற்படுத்தி புதியதொரு நிலையை ஏற்படுத்தியது. ஆர்ப்பாட்டம் செய்தவர்கள்மீது மூன்று ஜில்லாக்களில் ஆறு இடங்களில் ஒன்பது தடைவைமளில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய நேர்ந்தது. துப்பாக்கிப் பிரயோகத்தினுல் 19 மாணவர் மாண்டனர். 21 பேர் காயமடைந்தனர். திருப்பூரில் இரண்டு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களை ஆர்ப்பாட்டக்காரர் உயிருடன் தீ வைத்துக் கொளுத்தினர்.

ராணுவம் அழைக்கப்பட்டது

மாணவர்களின் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பலாத்காரச் செயல்களாக உருவெடுத்துள்ளதைத் தொடர்ந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு ராணுவம் அழைக்கப்பட்டுள்ளது. திருச்செங்கொடு, திருப்பூர், கடலூர் ஆகிய இடங்களுக்கு ராணுவஅணிகள் அனுப்பப்பட்டுவிட்டதாகவும் இதர இடங்களுக்கும் அவசியம் ஏற்படும்பொழுது அணிகள் அனுப்பப்படுமென்றும் தமிழ்நாடு அரசாங்க தலைமைக் காரியதரிசி திருவார்கிஸ் தெரிவித்தார். மேலும் கல்வி நிலையங்களை மூடும் அதிகாரம் அந்தந்த ஜில்லாக்களின் கலக்டர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

குமாரபாளையத்தில் 10 பேர் பலி

குமாரபாளையத்தில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர் துணிஆலை ஒன்றையும், பொலிஸ் நிலையத்தையும் தாக்கியதாகவும் அவைகளுக்குத் தீ வைக்க முற்பட்டதாகவும் நிலைமை மோசமாகவே பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. பொலிசார் சுட்டதில் பத்துப்பேர் மாண்டனர்.

தபால்நிலையம், ரயில்கள் தீ வைக்கப்பட்டன

திருச்சிக்குச் சமீபத்தில் மணப்பாறை என்னுமிடத்திலுள்ள ரயில் நிலயத்தில் ஆர்ப்பாட்டக்காரர் புகுந்து ரயில் நிலயத்தை வசப்படுத்திக்கொண்டு ரயில்வே ஊழியர்கள் தமது கடமையைச் செய்யவிடாது தடுத்தனர். இரு பிரயாணிகள் ரயில்வண்டிகளையும் தடுத்து வைத்திருந்தனர். காஞ்சிபுரத்தில் பிரயாணிகள் ரயில் வண்டியில் சென்ற ஆர்ப்பாட்டக்காரர் அபாயச் சங்கிலியை இழுத்து வண்டியை ஓரிடத்தில் நிறுத்தினர். வண்டி நின்றதும் ஆயிரக்கணக்கில் ஆர்ப்பாட்டக்காரர் திரண்டு என்ஜின் சாரதியையும் ஊழியர்களையும் இறங்கும்படி சொல்லிவிட்டு ரயில் மீது கற்களை வீசிச் சேதப்படுத்தினர். பின்னர் ரயில்வண்டிக்குத் தீவைத்தனர். ரயில் பெட்டிகளும் என்ஜினும் பலத்த சேதத்துக்குள்ளாகின. கரூரில் ரயில்நிலயத்துக்கும் பொலிஸ்நிலயம், தபால்நிலயம் ஆகியவைகளுக்கும் ஆர்ப்பாட்டக்காரர் தீவைத்தனர். மதுரைஜில்லாவில் தேவாரத்தி என்ற இடத்தில் தபால்நிலயத்திற்குள் ஆர்ப்பாட்டக்காரர் புகுந்து தஸ்தாவேஜுகளுக்குத் தீ வைத்தனர்.

தியேட்டர் முன் துப்பாக்கிப்பிரயோகம்

கோயம்புத்தூரில் இந்தி சினிமாப்படம் திரையிடப்பட்டிருந்த தியேட்டர் ஒன்றின் மீது ஆர்ப்பாட்டக்காரர் ஆயிரக்கணக்கில் திரண்டு தாக்குதல் நடத்தியபின் தியேட்டருக்குத் தீ வைக்க முற்பட்டபோது நிலைமையைச் சமாளிப்பதற்காக பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் இருவர் மாண்டனர். மூவர் காயமடைந்தனர். திருச்செங்கோட்டில் பொலிஸ்நிலயத்தைத் தாக்கிய ஆர்ப்பாட்டக்காரர் மீது இருதடவைகள் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் நால்வர் மாண்டனர். திருப்பூரில் மூன்று தடவைகள் பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர் மீது சுட்டனர். இங்கு இரண்டு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களை ஆர்ப்பாட்டக்காரர் தீயிட்டு உயிருடன் பொசுக்கினர்.

மற்றும் இரு ராஜ்யங்களிலும்

இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மைசூர் ராஜ்யத்திற்கும் கேரள ராஜ்யத்திற்கும் பரவியுள்ளது. பங்களூரிலும் கோட்டயத்திலும் நேற்று இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

தமிழ்நாட்டில் பலர் கைது

இந்தி எதிப்பு ஆர்பாட்டம் காரணமாக சென்னையிலும் மற்றும் இடங்களிலும் மாணவர்கள் நேற்று பெருமளவில் கைதுசெய்யப்பட்டனர்.

ஜோன்ஸன் ஆட்சேபம்

வாஷிங்டன், பெப். 11

வியட்காம் சம்பவத்துக்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக மாஸ்கோவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது அமெரிக்க தூதரகத்துக்கு சோவியத் அரசாங்கம் போதிய பாதுகாப்பு அளிக்கவில்லையென்று அமெரிக்க அதிபர் சோவியத்யூனியன் மீது ஆட்சேபம் தெரிவித்தார். இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தும் சோவியத் அதிகாரிகள் பாதுகாப்பு அளிக்கவில்லையென்று அவர் குறைகூறினர்.

குடும்பங்கள் வெளியேற்றம்

டோக்கியோ, பெப். 11

தென்வியட்நாமிலிருந்து அமெரிக்கக் குடும்பங்கள் வெளியேறத் தொடங்கியுள்ளன. இரு பெண்களும் ஏழு குழந்தைகளும் அமெரிக்கா செல்லும் வழியில் இன்று டோக்கியோ வந்து சேர்ந்தனர். மற்றும் 175 பேர் இன்றிரவு இங்குவந்துசேர்வசென எதிர்பார்க்கப்படுகிறது.

பீகிங்கில் கோஸிஜின்

பீகிங், பெப். 11

வடவியட்நாம் தலைநகரில் இருந்து புறப்பட்ட சோவியத் பிரதமர் கொஸிஜின் சீனத் தலைநகரான பீகிங் சென்று சீனப் பிரதமரைச் சந்தித்துப் பேசினர்.

ஆயுதம் வழங்காது

கெய்ரோ, பெப் 11.

இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை உடனடியாக நிறுத்திவைப்பதற்கு மேற்கு ஜெர்மனி இணங்கியிருப்பதாக ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் அலி சாப்ரி தெரிவித்துள்ளார்.

கம்யூனிஸ்ட்கட்சி கோரிக்கை

புதுடில்டி, பெப். 11

தென்வியட்நாமிலிருந்து அமெரிக்கப்படைகளை வாபஸ் பெறுமாறு இந்தியா கோர வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியிடம் சமர்ப்பித்த ஒரு மகஜரில் கேட்டுள்ளது.

அமெரிக்கநிலைகள் மீது 'வியட்காங்' கடும் தாக்குதல்

40 அமெரிக்கர், 300 வியட்நாமியர் மாண்டதாகத் தகவல்

சைகோன், பெப். 11

தென்வியட்னாமிலுள்ள அமெரிக்க ராணுவ நிலயங்கள்மீது வியட்காங் கம்யூனிஸ்ட் கொரில்லாக்கள் நேற்று கடும் தாக்குதல் நடத்தின. தென்வியட்னாம் தலைநகரான சைகோனுக்கு 250 மைல் தூரத்தில் அமெரிக்க ராணுவ நிலை ஒன்றின்மீது வியட்காங் நடத்திய கடும் தாக்குதலில் அந்த நிலை முற்ருக அழிக்கப்பட்டுவிட்டதாகவும், 40 அமெரிக்க ராணுவத்தினர் மாண்டிருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

300 தென்வியட்னாம் துருப்புகள் பலி

நேற்று வியட்காங் கம்யூனிஸ்ட் கொரில்லாக்கள் நடத்திய கடும் தாக்குதலில் தென்வியட்னாம் படைகள் பல இடங்களில் தோல்வியடைய நேர்ந்தது. ஓரிடத்தில் 300 தென்வியட்னாம் அரசாங்கத் துருப்புகள் மாண்டிருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் அல்லது காணமற்போயிருக்கலாமெனக் கருதப்படுகிறது. வியட்காங் கம்யூனிஸ்ட் கொரில்லாத் துருப்புகள் தொடர்ந்து பல இடங்களில் அமெரிக்க ராணுவநிலைகள் மீதும், தென்வியட்னாம் துருப்புகளை எதிர்த்தும் கடும் தாக்குதல் நடத்திவருவதாக கூறப்படுகிறது.

ஏவாயுத நிலைக்குச் சமீபத்தில்

விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பொருத்தப்பட்ட டாநாங் என்ற இடத்திற்குச் சமீபத்திலும் கொரில்லாத் துருப்புகள் கடும் தாக்குதல்நடத்தின. சைகோனுக்கு 60 மைல் தூரத்தில் அமெரிக்க நீர்மூழ்கி ஒன்றை வடவியட்னாம் துருப்புகள் தாக்கிச் சேதப்படுத்தியதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. சைகோனுக்கு கிழக்கே சிலமைல் தூரத்தில் நடைபெற்ற ஒரு சண்டையில் 85 பேர் மாண்டதாகவும் அறியப்படுகிறது.

சோவியத் உதவி

வடவியட்னாமுக்கு விஜயம்செய் திருந்த சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் ஹனோயிலிருந்து புறப்படுமுன் வியட்னாம் அதிபருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஒரு கூட்டறிக்கையில் கைச்சாத்திட்டார். வடக்கு வியட்னாமுக்கு அதன் சுயநிர்ணய உரிமையைப் பாதுகாக்கவும், வெளியார் தாக்குதலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும் அவசியமான சகல உதவிகளையும் சோவியத் யூனியன் அளிக்க ஒப்புக்கொண்டுள்ளதாக கூட்டறிக்கை கூறுகிறது. தென்வியட்னாமிலிருந்து சகல அமெரிக்க ராணுவச் சிப்பாய்களையும், தளங்களையும் வாபஸ்பெறுமாறு அமெரிக்காவை திரு. கொஸிஜின் அந்தக் கூட்டறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

அதிபர் ஜோன்ஸன் ஆலோசனை

தென்வியட்னாமில் அமெரிக்க நிலைகள்மீது வியட்காங் கொரில்லாக்கள் கடும் தாக்குதல்நடத்தியதாகத் தகவல் கிடைத்ததும் அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் தேசிய பாதுகாப்புச் சபையை அவசரமாகக் கூட்டி அடுத்த நடவடிக்கை பற்றி ஆலோசனைநடத்தினர். வடவியட்னாம் தலைநகரான ஹானேய் மீது அமெரிக்கா தாக்குதல்நடத்துமா என்பதுதான் அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படும் கேள்வி.

இந்தியா, பிரான்ஸ் கவலை

இந்தோசீனவில் நிலமை மோசமாகிவருவது பற்றி இந்தியாவும், பிரான்சும் கவலைதெரிவித்துள்ளன. பிரெஞ்சுப் பிரதமர் திரு பொம்பிடோவும், இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸதிரியும் நேற்றுப் புதுடில்லியில் விடுத்த ஒரு கூட்டறிக்கையில் இந்தோசீனவில் சம்பந்தப்பட்ட நாடுகளனைத்தும் ராணுவத் தீர்வுக்குப் பதிலாக அரசியல் தீர்வுகாண முயற்சிசெய்யவேண்டுமென்றும் தெரிவித்துள்ளனர்.

ஜோன்ஸன், கொஸிஜினுக்கு சாஸ்திரி கடிதம்

வியட்னாம் நிலமை குறித்து அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸனுக்கும், சோவியத் பிரதமர் திரு. கொஸிஜினுக்கும் திரு. லால்பகதூர் சாஸ்திரி கடிதம் எழுதியுள்ளார். திரு. ஜோன்ஸனும், திரு. கொஸிஜினும் சந்தித்துப் பேச வேண்டுமெனச் சில தினங்களுக்கு முன் வெளியிட்ட கருத்தையே கடிதத்திலும் அவர் தெரிவித்திருக்கக்கூடுமென நம்பப்படுகிறது.

ஜோன்ஸன் ஏற்கவில்லை

வியட்னாம் பிரச்சினை சம்பந்தமாக 1954ம் வருடத்திய ஜெனிவா மகாநாடுகள்மீண்டும்கூடவேண்டுமென இந்தியப்பிரதமரும், பிரெஞ்சு ஜனாதிபதியும் தெரிவித்த யோசனைபற்றி அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸன் கருத்துத் தெரிவிக்கையில் ஜெனிவா மகாநாட்டின் தீர்மானங்களை அண்டைநாடுகள் விஷயத்தில் சீனு நடந்துகொள்ளாதவரை மற்ருெரு மகாநாட்டினுல் பயனில்லை என்ருர்.

பாதுகாப்பு நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

தேர்தல் கூட்டங்கள் நடைபெறும்போது கூட்டம் நடைபெறும் இடத்திலும் சுற்றுப்புறத்திலும் மக்கள் பாதுகாப்பாக இருந்துகொள்வதற்கு வகை செய்யுமுகமாக உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலெறிக் அபயகுணவர்த்தன நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

36 பேர் பலி

கெய்ரோ, பெப். 11

கெய்ரோவுக்கு அருகில் நிகழ்ந்த ஒரு பஸ் விபத்தில் 36 பேர் மாண்டனர்.

இரத்ததானம் செய்வதால் புதிய உற்சாகம் தோன்றும்

யாழ்ப்பாணம், வெள்ளி

“யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இரத்தவங்கியில் இரத்தம் குறைவாகவே உள்ளது. இதனால் சத்திரசிகிச்சை செய்யமுடியாத நிலையும் ஏற்படுகிறது. இதனால் எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றுவது மிகவும் கஷ்டமாக உள்ளது. மனிதருக்கு மனிதர் செய்யக்கூடிய சிறந்த தானங்களில் இரத்ததானம் மிகவும் உன்னதமானது. தெற்கில் உள்ள சிங்கள சகோதரர்கள் இரத்ததானம் செய்ய பின்நிற்பதில்லை. மிக விருப்பத்துடன் இரத்ததானம் செய்வார்கள். இரத்ததானம் செய்வதால் தேகசுகம் கெட்டுவிடுவதில்லை. அதற்கு பதிலாக புது இரத்தம் உற்பத்தியாகி புதிய உற்சாகத்தைக் கொடுக்கிறது”

இவ்வாறு வலிகாமம் மேற்கு செஞ்சிலுவை சங்கத்தின் ஆதரவில் மானிப்பாய் பட்டின சபையின் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற அமெரிக்க தூதரக இலவச படக்காட்சி வைபவத்தில் பேசுகையில் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் வி. சங்கரப்பிள்ளை தெரிவித்தார். வைபவத்து பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். இராசேந்திரம் தலைமைவகித்தார்.

அரசினர் தமிழ் ஆசிரியர் சங்க கிளை

சுழிபுரம், புதன்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வலிகாமம் மேற்குக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் கட்டுடை சைவ வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு திரு. க. சுப்பிரமணியம் தலைமைவகித்தார். கிளைச் சங்க உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. த. ச. சண்முகதாசன் உப தலைவர்கள் பண்டிதர் ஞான. மயில்வாகனம், திரு. வி இராசதுரை. காரியதரிசி திரு. செ. கந்தையா உப காரியதரிசிகள் திரு. மா. கனகரத்தினம், திருமதி ப. சிவகுருநாதன். தனாதிகாரி திரு. வி. காசிப்பிள்ளை உப தனாதிகாரி திரு. சி. செல்லநாதன் நிர்வாகசபை அங்கத்தினர்கள் திருவாளர்கள் எஸ். பொன்னம்பலம், இ. செல்லத்துரை, எம். கந்தசாமி கணக்குப் பரிசோதகர் திரு. ப. சுப்பிரமணியம்.

ஆட்சேபக் கூட்டம்

பம்பலப்பிட்டி, புதன்

வியட்னும் தளங்கள் மீது அமெரிக்க தாக்குதல் நடத்தியதை ஆட்சேபிக்குமுகமாக ஒரு பொதுக்கூட்டத்தை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் இலங்கைத் தொழிற் சங்கசம்மேளனத்தினர் நடத்தவிருக்கின்றனர். இக் கூட்டத்தில் சகல தொழிற்சங்கங்களையும் கலந்து கொள்ளுமாறு சம்மேளனக் காரியதரிசி திரு. எஸ். சண்முகதாசன் அழைப்பு விடுத்துள்ளார்.

மனோகரா (யாழ்ப்பாணம்) (போன்: 485)
குருடட், மீனகுமாரி
நடித்த
சாஹிபிபி ஓர் குலாம்
(ஜனாதிபதி பரிசுபெற்றஹிந்தி)

ராஜா சினிமா (சுழிபுரம்)
மனோகர்
நடிக்கும்
கொஞ்சும்குமரி

REGAL — JAFFNA
NOW SHOWING
Edmund Purdom
in
WHITE SLAVE SHIP
(Colorscope)

5-வது வெற்றி வாரம்!
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்: மாலை 2-30, இரவு 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்:
காலை 10-30, மாலை 2-30, இரவு 6-30, 9-30

சிவாஜி கணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
கர்ணன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
மற்றும் 6 சினிமாஸ் திரைகளில்
ஜெமினி கணேசன் - சாவித்திரி
நடித்த
கற்பகம்

கோண்டாவிலிலுள்ள நீர் ஊற்று கிணறுகள்

கி. மு. சங்கத்தின் மகஜர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகரசபை பகுதிக்கு தண்ணீர் விநியோகம் செய்யும்பொருட்டு கோண்டாவிலில் அமைக்கப்பட்ட நீரூற்றுக் கிணறுகளால், அப்பகுதியில் உள்ள கிணறுகளால் போதிய தண்ணீர் இல்லாமையால் ஏழைவிவசாயிகள்பெரும் கஷ்டமுறுகிறார்கள் என்றும் இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோண்டாவில் கிழக்குகிராம முன்னேற்றச்சங்கம் காணிநீர்ப்பாசனபகுதிநிரந்தரக் காரியதரிசி, வடமாகாண அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது. நாலு கிணறுகள், நீரூற்றுக்கள் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டு 24 மணி நேரமும் தண்ணீர் தாங்கிக்குப் பாய்ச்சப்படுவதால், அவ்வூரில் உள்ள கிணறுகளில் தண்ணீர் மிக மோசமான நிலையில் குறைந்துவருவதாகவும், தனிக்கிணறு தோண்டமுடியாமல் நாலு மூன்று பேராகச் சேர்ந்து ஒரு கிணறு வெட்டி விவசாயம் செய்யும் ஏழை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. தண்ணீர் தாங்கிக்கு நீர் பாய்ச்சுவதை உடனயாக நிறுத்துமாறும் அல்லது மாற்றுவகையாக கிராம விவசாயிகளைப் பாதிக்காதவகையில் நிபுணர்களின் உதவியோடு தொடர்ந்து செய்யுமாறும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

தண்ணீரை

தக்க முறையில் பயன்படுத்தவேண்டும்

வவுனியா, வியாழன்

“இஸ்ரேல் நாட்டில் உள்ள விவசாயிகள் தங்கள் நாட்டில் உள்ள தண்ணீர் வளத்தை, தக்க முறையில் அட்டவணைப்படுத்தி அதன் பிரகாரம் விவசாயம் செய்துவருகிறார்கள். எனவே அவர்கள் நாட்டில் வரட்சி என்ற நிலைமை ஏற்படுவதில்லை; இங்கும் நாம் இவ்விதம் செய்தால் நல்ல முறையில் விவசாயம் செய்து நாட்டை வளம்படுத்தலாம்” என்று வவுனியாவில் தமிழரசு அபேட்சகராகப் போட்டியிடும் திரு. ஜி. வின்சனை ஆதரித்து செமமடுவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் திரு. ஆலாலசுந்தரம் குறிப்பிட்டார்.

தமிழர்களின் விமோசனத்துக்கு வழி செய்யக்கூடிய ஒரேயொரு கட்சி தமிழரசுக் கட்சிதானென்றும் அவர் குறிப்பிட்டார். கூட்டத்துக்கு திரு. சி. தம்பையா தலைமைவகித்தார். வேறு பலரும் கூட்டத்தில் பேசினர்.

சட்டவிரோதக்காரர் மீது கண்காணிப்பு

கொழும்பு, வியாழன்

சட்டவிரோத குடியேற்றக்காரர் எனக் கருதப்படுபவர்கள் மீதும் விசா காலாவதியாகியும் தங்கியிருப்பவர்கள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளுமுகமாக இத்தகையோரது கைவிரலடையாளங்கள், புகைப்படங்கள் ஆகியவை குடியேற்ற, வெளியேற்ற இலாகாவினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பொலிசாரின் உதவியுடனே இலாகா மேற்படி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சமய தீட்சை

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற ஞாயிற்றுக்கிழமை வேலணை திருஞான சம்பந்த [illegible] முதியோரும் உட்பட 55 பேர் சமய தீட்சை பெற்றனர். மேற்படி சமயதீட்சை காரணைவாய் ஸ்ரீமத் திருஞானகை, சம்பந்தக் குருக்கள் நடத்தி வைத்தார்;

வேலணை திருஞான சம்பந்தர் மட நிர்வாகிகள் சார்பாக திரு. மு. மயில்வாகனம், குருக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

‘தேசியக் கொடியில்கூட தமிழருக்கு உரியஇடமில்லையே’

தமிழரசுப் பிரசாரக் கூட்டத்தில் மட்டக்களப்பு முன்னாள் எம். பி.

யாழ்ப்பாணம், வெள்ளி

“இலங்கையின் தேசியக் கொடியில் தமிழர்களுக்கு மிக அற்பமான இடமே கொடுக்கப்பட்டுள்ளது. தமிழர் இந்த விஷயத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்றே கூற வேண்டும். இத்தகைய கொடியை தேசியக் கொடியாக ஏற்றுக்கொண்டவர்கள் எல்லோரும் இவ்வித புறக்கணிப்புக்கு ஒத்துக்கொண்டவர்களாகவே கணிக்கப்படவேண்டும்”.

இவ்வாறு யாழ்ப்பாணம் றெக்கிளமேசன் கடலை மைதானத்தில் யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் அபேட்சகர் திரு. சி. செ. மாட்டினை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் பேசிய மட்டக்களப்பு முன்னாள் எம். பி. திரு. செ. இராசதுரை குறிப்பிட்டார்.

திரு. இராசதுரை மேலும் கூறியதாவது:—

குடியேற்றத்திட்ட விஷயத்தில் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த இடங்களெல்லாம் இப்பொழுது திட்டமிடப்பட்டு சிங்களக் குடியிருப்பு இடமாக மாற்றப்பட்டு வருகிறது. இதனைத் தடுக்க தமிழர் ஏகோபித்த முயற்சி மேற்கொள்ளவேண்டும். இல்லாவிடில் நமது பாரம்பரிய பிரதேசங்களை கண்டிப்பாக இழக்கவேண்டி நேரிடும்.

மலைநாட்டுத் தமிழர்கள் இப்போது பெரிய இன்னல்களுக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. 'நாடற்றவர்' என்ற ஒரு பதம் இலங்கையில் மட்டும்தான் பிரயோகத்தில் இருந்துவருகிறது. தமிழர்களின் பலத்தைக் குறைக்கவே இந்தவித அநீதிகள் செய்யப்படுகின்றன, தமிழினம் ஒரு சக்தியுள்ள இனமாகிவிடுமோ என்பதனை அஞ்சியே சிங்களத் தலைவர்கள் மேற்படி சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

யாழ்ப்பாணத் தொகுதியில் கட்சிசார்பில் போட்டியிடும் திரு. மார்ட்டின் பேசுகையில் கூறியதாவது:—

மக்கள் வாக்களிக்குமுன் போட்டியிடும் கட்சிகள் பற்றி நன்கு பரிசீலனை செய்யவேண்டும். இவ்விதம் ஆராய்ந்து வாக்களிப்பதாலேயே தமது எதிர்காலத்தை அவர்கள் நிர்ணயித்துக்கொள்ளலாம். நேர்மையுள்ளவர்கள் ஒரே நோக்குள்ளவர்கள் ஒன்றுசேர்ந்து பார்லிமெண்டுக்கு செல்வதால் ஒரே குறிக்கோளோடு கொள்கையை விட்டுக்கொடுக்காது ஒரு விஷயத்தில் வெற்றி பெறலாம்

நல்லூர் முன்னாள் எம். பி. டாக்டர் நாகநாதன் பேசியதாவது.

கூட்டரசாங்கம் எமது கோரிக்கைகளுக்கு இணங்காததாலேயே நாம் அதனுடன் ஒத்துழைக்க மறுப்புத் தெரிவித்தோம். மொழி, பிரஜாஉரிமை, குடியேற்றத் திட்டம் ஆகிய முக்கிய விஷயங்களில் நாம் விடுத்த வேண்டுகோளுக்கு அவர்கள் இணக்கம் தரவில்லை. இவற்றுக்கு இணக்கம் தராத எந்த அரசாங்கத்துடனும் ஒத்துழைப்பதால் எதுவித பயனுமில்லை.

முன்னாள் உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் பேசுகையில், குறுகிய காலத்தில் உரிமையை சுலபமாக பெற்றுவிட முடியாதென்றும் தொடர்ந்து சலியாது நடவடிக்கை எடுப்பதன்மூலமே உரிமையைப் பெறமுடியுமென்றும் கூறினர்.

பருத்தித்துறை முன்னாள் எம். பி. திரு. க. துரைரத்தினம் பேசுகையில், ஒரு கொள்கையில் விடாப்பிடியாக இருப்பதன்மூலமே அந்தக் கொள்கையில் வெற்றிபெற முடியுமென்றும் இடையில் வரும் இன்னல்களுக்கு அஞ்சினால் இறுதியில் வெற்றியடையமுடியாது என்றும் குறிப்பிட்டார்.

கோப்பாய்த் தொகுதி அபேட்சகர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில், விடுதலை இயக்கம் பார்லிமெண்டுக்குள்ளேயும், வெளியேயும் நடைபெற வேண்டுமென்றும் ஒரு கொள்கை அடிப்படையில் விடுதலை இயக்கம் அமையவேண்டுமென்றும் தமிழரின் எதிர்காலம் நல்லதொரு அடிப்படைக் கொள்கையில் ஒரே நோக்குள்ளவர்கள் சலியாது உழைப்பதில் தான் தங்கியிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் யாழ்ப்பாண நகர முதல்வர் திரு. க. செ. மாதேவா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்பட பலர் பேசினர்.

சிரமதானம் மூலம் பாடசாலைக்கு வீதி

பருத்தித்துறை, வியாழன்

புலோலி கிழக்கு அரசினர் பாடசாலைக்குச் செல்வதற்காக புலோலி கிராம வாலிபர்களால் சிரமதான அடிப்படையில் செய்துமுடிக்கப்பட்ட ரஸ்தாவை யாழ்ப்பாண மாவட்ட அதிபர் திரு. என். டி. ஜெயவீரா இம்மாதம் 20-ந் திகதியன்று திறந்து வைப்பார் எனத் தெரியவருகிறது

வடமராட்சிக் காரியாதிகாரி திரு. யே. டி. ஆர்னல்ட் ஆரம்பித்துவைத்த இந்த ரஸ்தாவின் பெறுமதி ரூபா 5 ஆயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சேவை நலம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

பிரபல இலக்கிய, சமயக் கட்டுரை ஆசிரியரான பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளையின் சேவையைப் பாராட்டுமுகமாக நாளை பிற்பகல் 3 மணிக்கு பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கழக மண்டபத்தில் பாராட்டு விழா ஒன்று நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில்பலதமிழறிஞர்கள்கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இவ்விழாவில் பண்டிதர் கிருஷ்ணபிள்ளையின் 'இலக்கியச் சோலை' என்னும் நூல் வெளியீடும் இடம் பெறும்.

நூதனசாலை அதிகாரிக்கு கட்டாய லீவு

பம்பலப்பிட்டி, வியாழன்

தேசிய நூதனசாலை பதில் டைரக்டர் திரு. சிசங்கா செனிவரத்னவுக்கு கட்டாய லீவு வழங்கப்பட்டுள்ளது.

நிர்வாக சீர்கேடு சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

கல்லூரிக் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் மத்தியகல்லூரிக்கும் ஹாட்லிக்கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டத்தில் மத்தியகல்லூரி ஒரு விக்கட்டினால் வெற்றியீட்டியது. ஆட்டம் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. ஹாட்லிக்கல்லூரி முதல் ஆட்டத்தில் துடுப்பெடுத்தாடியபோது மொத்தம் 110 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. மத்திய கல்லூரி 133 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இரண்டாவது ஆட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி திறமையாக விளையாடி 144 ஓட்டங்கள் எடுத்தது. ஹாட்லிக்கல்லூரியின் சார்பில் ஏப்பிரகாம் திறமையாக விளையாடி 57 ஓட்டங்களும் மத்திய கல்லூரியின் சார்பில் நடராசா 37 ஓட்டங்களையும் எடுத்து ஆறு ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். மத்தியகல்லூரி இரண்டாவது ஆட்டத்தில் தேவையான ஓட்டங்களை எடுத்து வெற்றியீட்டியது.

மாணவர்கள் கற்கள் வீசினர்

இப்போட்டி முடிவடைந்து மத்தியஸ்தர்கள் மைதானத்தை விட்டு வெளியே வரும்பொழுது சில மாணவர்கள் மத்தியஸ்தர்களுக்கு கற்களால் எறிந்தார்கள் என்றும் இப்படியான சம்பவங்கள் முன்னர் யாழ்ப்பாண விளையாட்டிலே நடைபெறவில்லை என்றும் கூறப்படுகிறது.

சென்.ஜோன்ஸ் வெற்றி

சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட்போட்டி இறுதியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதல் ஆட்டத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரி துடுப்பெடுத்தாடி 296 ஓட்டங்களைப் பெற்றது. விபுலானந்தமூர்த்தி, கனகதுரை, சூர்யகுமார் முறையே 74, 60, 41 ஓட்டங்களை பெற்றனர். ஸ்கந்தவரோதயக்கல்லூரி துடுப்பெடுத்தாடியபோது மொத்தம் 84 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. தெய்வேந்திரா 23 ஓட்டங்களை கொடுத்து நான்கு விக்கெட்டுகளை கைப்பற்றினர். சென்ஜோன்ஸ கல்லூரி இரண்டாவது ஆட்டம் ஆடாமல் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை மீண்டும் துடுப்பெடுத்தாடவிட்டபோது ஸ்கந்தா 132 ஓட்டங்களைப் பெற்றது. தெய்வேந்திரம் 30 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

சென்பற்றிக்ஸ் வென்றது

சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்குமிடையே மானிப்பாய் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் மனிப்பாய் இந்துக் கல்லூரி முதல் ஆட்டத்தில் 101 ஓட்டங்களும் இரண்டாவது ஆட்டத்தில் 16 ஓட்டங்களையும் பெற்றது. சென் பற்றிக்ஸ் கல்லூரி முதல் ஆட்டத்தில் 90 ஓட்டங்களும் இரண்டாவது ஆட்டத்தில் நான்கு விக்கெட் நஷ்டத்திற்கு 29 ஓட்டங்களையும் பெற்று தனது ஆட்டத்தை நிறுத்தியது. மானிப்பாய் இந்துக்கல்லூரியின் சார்பில் பாலச்சந்திரன் 56 ஓட்டங்களைக் கொடுத்து 10 விக்கெட்டுகளை கைப்பற்றினர். சென்பற்றிக்ஸ்கல்லூரியின் சார்பில் பெனடிக் 89 ஓட்டங்களைக்கொடுத்து 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். ஆறு விக்கெட்டுகளால் சென் பற்றிக்ஸ் வெற்றியீட்டியது.

மாதர் சங்க புதிய கட்டடத் திறப்பு விழா

சுழிபுரம், புதன்

சித்தங்கேணி மாதர் சங்க புதிய கட்டடத் திறப்பு விழா சென்ற திங்கட்கிழமை நடைபெற்றது. புதிய கட்டடத்தை வலிகாமம் மேற்கு காரியாதிகாரி ட்பிள்யு. டி. செல்வரத்தினம் திறந்துவைத்தார் இவ்வைபவத்தில் பலர் கலந்து கொண்டனர்.

கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகள் செய்து முடிப்பதற்கு கேள்வி விண்ணப்பங்கள் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் அவர்களால் கோரப்படுகின்றன.

1. லூர்த்துமாதா தெரு: கல்லுப்போட்டுத்தார் ஊற்றுதல்
2. பிள்ளையார் கோவில் ஒழுங்கை:
கல்லுப்போட்டுத் தார் ஊற்றுதல்.
3. மணல் ஒழுங்கை: " " "
4. முக்கம் ஒழுங்கை: " " "
5. உடையார் ஒழுங்கை: " " "
6. பெருவெட்டி ஒழுங்கை: " " "
7. பிராமண ஒழுங்கை: " " "
8. காளிகோவில்
கிணற்றடி ஒழுங்கை: " " "
9. முதலாம்கட்டை ஒழுங்கை: " " "
10. தட்டாதெரு ஒழுங்கை:
(W 9): " " "
11. ஆத்தியடி ஒழுங்கை: " " "

2. கேள்வி விண்ணப்பங்கள் 20-2-1965ன் பிற்பகல் இரண்டு மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக இரு பத்திரங்களில் நிரப்பப்பட்டு தலைவர், நகரசபை, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3. விண்ணப்பப் பிரதிகள் 18-2-65 பிற்பகல் 2 மணி வரை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் பெறுபவர் ரூபா 25-00 பிணைப்பணமும், ரூபா 5-00 பிரவேசப்பணமும் செலுத்தவேண்டும்.

4. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் அறிவித்தல் கிடைத்த ஒரு வாரத்துக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலையை ஆரம்பிக்கவேண்டும். அங்ஙனம் தவறுபவரின் பிணைப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

5. மேற்படி வேலைகளின் முழு விபரங்கள் அறிய விரும்புபவர்கள் நகரசபைக் காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

வே. நாகநாதன்
தலைவருக்காக,
நகரசபை, பருத்தித்துறை.

நகரசபைக் காரியாலயம்,
பருத்தித்துறை. 6-2-65

1603

கேள்விப்பத்திரங்கள் கோரிக்கை

வலி-மேற்கு பல நோகக கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கல்லுண்டாய் உப்பளத்தின் தென்கரை பகுதியில், தரவைக் கட லுன்,
850 அடி நீளம்,
20 அடி அகலம்,
2 அடி ஆளமான வாய்க்கால் வெட்டுவதற்கு ஒப்பந்தம் கோரப்படுகின்றது.

தெளிவான விபரங்களை அறிய விரும்புபோர் உப்பளக் காரியாலயத்தில், வேலை நேரத்தில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 20-2-65-ம் திகதிக்கு முன்னதாக சமாமசத் தலைவருக்கு பதிவுத் தபாலில் எழுதி அனுப்ப வேண்டும்.

தலைவர்,
வலி-மேற்கு பல நோக்க
கூட்டுறவுச் சங்கங்களின்
சமாசம்,

சங்கானை,
8-2-65. 1601

கேள்வி விளம்பரம்

சுன்னாகம் பட்டணசபை

1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20-ம் திகதி காலை 10 மணிக்கு முன் அனுபவம் வாய்ந்த கொந்தராத்துக்காரரிடமிருந்து சுன்னாகம் சந்தை தண்ணீர் விநியோகத் திட்டத்திற்கு, சீல் வைத்த கேள்விகள் சுன்னாகம் பட்டணசபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1965-ம் ஆண்டு பெப்பரவரி மாதம் 19-ம் திகதி பி. ப. 3 மணிவரைவைப்புப் பணமாக ரூபா 100-00-ம், பத்திரப் பணமாக ரூபா 5-00-ம் செலுத்தி கேள்விப் பத்திரம் பெறு கொள்ளலாம். கேள்விப் பத்திரத்திற்காகக் கட்டும் ரூபா 5-00 திருப்பிக் கொடுபடமாட்டாது.

ஏனைய விபரங்கள் யாவும் சுன்னாகம் பட்டணசபைக் காரியாலயத்தில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

ஆ. நடராசா,
பதில் தலைவர்,
பட்டணசபை.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம், 9-2-65.

1606

78 பேர் விபரம் வெளியிட்டனர்

பம்பலப்பிட்டி, வியாழன்

இதுவரை 78 பேர் தாம் வெளியிடாது மறைத்து வைத்திருந்த தமது சொத்து விபரங்களை வெளியிட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

மரண அறிவித்தல்

தம்பாபிள்ளை

ஓய்வுபெற்ற போஸ்ட்மாஸ்டர் எஸ். தம்பாபிள்ளை காலமானார். இவர், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் அக்கவுண்டன் சோமசேகரம், மதவாச்சி டிஸ்பென்ஸரி அப்போதிக்கரி ராஜமுத்தையா, இங்கிலாந்திலுள்ள றக்பையில் மின்சார என்ஜினியராக கடமையாற்றும் ராமனுதன், சட்ட மாணவன் யோகநாதர், மகேஸ்வரி, சிவபாக்கியம், சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் தந்தையும்; அனுராதபுரம் காணி அபிவிருத்தி பகுதியைச் சேர்ந்த சிவரத்தினம், வேலாயுதர், யாழ்ப்பாணம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த கனகரத்தினம், யாழ்ப்பாணம் சிவன் ஸ்டோர்ஸைச் சேர்ந்த நடராஜா, ஹைமாவதி, கனகம்மா ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

[illegible] யாழ்ப்பாணம்.

1578

விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள "சிங்கர்" கைத் தையல் மெஷின் ஒன்று விற்பனைக்கு உண்டு, விரும்புவோர் நல்லூர்க் கந்தசுவாமிகோயிலுக்குமுன் உள்ள ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸில் தொடர்பு கொள்ளவும்.

1568

திருநெல்வேலி சந்தியிலிருந்து கொக்குவில் செல்லும் ரோட்டின் அருகாமையில் வடக்கே செல்லும் புதுரோட்டில் 12 பரப்பு காணி மொத்தமாகவும் சிறு பகுதிகளாகவும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இல. 1570, C/o 'ஈழநாடு'. 1570

B. S. A. 3.5 CN வரிசை மோட்டர்சயிக்கிளும் பாட்சுகளும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு வே. சுந்தசாமி, பொனிஸ் ரேடியோ றூம், யாழ்ப்பாணம். அல்லது அராலி வடக்கு. 1574

நல்லநிலைமையிலுள்ள சவர்லட் (4400) 30 தொன் (பெற்ரோல்) மொடல் இரு லொறிகள் விற்பனைக்கிருக்கின்றன. நேரில் பார்வையிட்டு விலைகோரவும் K. வேலுப்பிள்ளை, பெற்ரோல் செற்றடி தண்ணியூற்று, முள்ளியவளை. 1575

பலாலி ரோட்டில் கிணற்றுடன் கூடிய 16½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் விற்கப்படும். தொழிற்சாலை. வீடு முதலியவற்றிற்கு முக்கியமானது. விபரம்: மு. ச. நடராசா, அம்மன் கோவிலடி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 1577

வெங்காயக் கூடை பின்னல் போட்டி

பருத்தித்துறை, வியாழன்

துன்னாலை வடக்கு மாதர் முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற வெங்காயக் கூடை பின்னும் போட்டியில் அம்பன் மாதர் முன்னேற்றச் சங்கம் முதல் இடத்தைப் பெற்றது. 2-ம், 3-ம் இடங்கள் புலோலி கிழக்கு நிலையத்திற்கும் அம்பன் நிலையத்திற்கும் கிடைத்தன.

ஐந்து நிலையங்களில் இருந்து 22 மாணவிகள் இப்போட்டியில் கலந்துகொண்டனர்.

காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் தலைமை வகித்தார்.

இந்தியாவுக்கு தேயிலை நன்கொடை

பம்பலப்பிட்டி, வியாழன்

1000 ரூத்தல் நிறையுள்ள தேயிலையை இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்தியாவின் தென்பகுதியில் சமீபத்தில் வீசிய சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுமுகமாகவே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

வரி விளம்பரம்

கல்வி

மாணவ, மாணவிகளே! வர்த்தக கணக்கியல் பாடங்களை ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் கற்கவிரும்புகிறீர்களா? பலரும் படித்துப் பயனடைந்த வர்த்தக கணக்கியல் கல்லூரியை (330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்) நாடுங்கள். காலையும் மாலையும் வகுப்புகள் நடைபெறுகின்றன.

1551

கைத்தறிச் சேலைகள்

எங்களிடம் உள்ளூர் கைத்தறிச்சேலைகள் - ஏராளமாக விற்பனைக்குண்டு. உங்கள் தேவைகளை இன்றே தெரிவு செய்து கொள்ளுங்கள். உள்ளூர் உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்பு சேலைகளை உடனக்குடன் எங்களிடம் விற்பனை செய்யலாம்;

S. R. S. ஜவுளி மாளிகை, 216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் போன்: 296. (1552)

தேவை

எமது கைத்தொழில் ஸ்தாபனத்திற்குதும்புக்கட்டு, ஈர்க்கு கட்டு, சவர்க்காரம் (Soapmaker) தயாரிக்ககூடிய தயாரிப்பாளர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்: சசிமலா இன்டஸ்ரீஸ் 72/1, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1566

எமது தயாரிப்புகளை சயிக்கிள் மூலம் விற்பனைசெய்யக் கூடிய சயிக்கிள் சேல்ஸ் மென்கள் தேவை, நேரில் வரவும். சசிமலா இன்டஸ்ரீஸ் 72/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1567

பிரபல சோதிடம்

சாதகப் பலன் ரூபா 3-00
ரேகை பலன் ரூபா 2-00
ஆருட பலன் ரூபா 1-00
S சிவகுருநாதன், 160, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1559

நன்றி நவிலல்

1-2-65-ல் நிகழ்ந்த பஸ் விபத்தில் உயிர்நீத்த எனது மகளும் சண்டிலிப்பாய் மகளிர் கல்லூரி மாணவியுமான செல்வி ஞானசோதியின் இறுதிச் சடங்குகளில் நேரில்கலந்துகொண்டவர்களுக்கும் தந்தி தபால் மூலம் துக்கம் தெரிவித்தவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். க, காங்கேசு, தலைமையாசிரியர், வேலணை. 1573

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

அருத எண்ணை

(அறுபதாம் பச்சையும்
வேறு 44 அரிய மூலிகைகளும் சேர்ந்தது)

கூந்தலைஅடர்த்தியாகவும் நீளமாகவும் வளர்க்கும்.
தலைமயிர் உதிர்வதையும், நரைப்பதையும்
தடுக்கும். பீனிசத்தை முற்றாக குணப்படுத்தும்.
மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்களுக்குப்
பிரகாசத்தையும் கொடுக்கும். கண் எரிச்சல்,
காது இரைச்சல், காதில் சீழ் வடிதல்,
அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல், தும்மல், தலையிடி
ஆகிய நோய்களைக் குணப்படுத்தும்.

சிறுவர் முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்

முழுப்போத்தல்	ரூபா 10-00	அரைப்போத்தல்	ரூபா 5-00
கால் போத்தல்	ரூபா 3-00	2 அவு. போத்தல்	ரூபா 1-00

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்:
வைத்தியர் பி. எம். திசாநாயக்க,
கம்பளை.

யாழ்ப்பாணத்திற்கு ஏகவினியோகஸ்தர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 541)

'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதி

பணமும் பொருளும் மென்மேலும் குவிகின்றன

'ஈழநாடு' சூறாவளி நிதிக்கு நாளுக்கு நாள் பணமும் பொருளும் அன்பர்களிடமிருந்து கிடைத்துவருகின்றன

திருநெல்வேலி, மகாத்மாஜி சனசமூகநிலைய அங்கத்தவர்களிடையே சேர்ந்த ரூ 27-70 சதத்தை அதன் தலைவர் கையளித்துள்ளார்.

மீசாலைச் சந்தையில் நேற்று இரவு நடைபெற்றதமிழ்காங்கிரஸ் கூட்டத்தில், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், தமக்கு அணிவிக்கப்பட்ட மாலைகளை 'ஈழநாடு' சூறாவளி நிவாரண நிதிக்குஎனகூறிஏலத்தில் விற்ஞர், 7மாலைகளைவிற்றதன்பெயரில்கிடைத்த 60ரூபாவும்இன்று கையளிக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் கிடைத்த நிதிவிபரம் வருமாறு-

மகாத்மாஜி சனசமூகநிலையம், திருநெல்வேலி — 27 70

சே, பாலசிங்கம், சமாதிரேட், அச்சுவேலி — 10-00

தேர்தல்கூட்டத்தில் ஏலத்தில் விற்கப்பட்ட மாலைகளை வாங்கி உதவியர்கள் —

வே. ச. இராஜையா பத்தர், சாவகச்சேரி — 10-00

மார்க்கண்டு, மீசாலை— 10-00

சி. இராசரத்தினம், உசன் — 10-00

மா. கனகசபை, மீசாலை—2-00

சி. கந்தையா, கொடிகாமம் — 2-00

பாரிஸ்டர்

எம். சிவானந்தன் —25-00

தியாகராசா, மீசாலை— 1-00

நேற்றுப் பிற்பகல்வரை பொருளாகவும், பணமாகவும் 25,670 ரூபா 21 சதம் வசூலாகியுள்ளது.

இரு மின்சார ரயில்களை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சாயத்து தலைவர் தேர்தல் ஒத்திவைப்பு

மாணவர்களின் ஹிந்தி எதிர்ப்பு காரணமாக நாளையும் மறுதினமும் தமிழ்நாட்டில் நடைபெறவிருந்த பஞ்சாயத்து தலைவர்கள் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது;

'ஆங்கிலம் என்றும் தேவை'

சென்னை பல்கலைக் கழக உபவேந்தர் டாக்டர் ஏ. லட்சமண முதலியாரும், அண்ணாமலைப் பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் வி. பி. ராமசாமி ஐயரும் விடுத்துள்ள அறிக்கையில்; மாணவர்களின் ஹிந்தி எதிர்ப்பு காரணமாக சகல பாடசாலைகளையும், கல்லூரிகளையும் மூடும்படி முதன் மந்திரிக்கு தாங்கள் யோசனை கூறியதாகத் தெரிவித்துள்ளனர். ஆங்கிலத்தை என்றும் நீடிக்கவேண்டும் என்றும் அரசியல் சாஸனத்தை திருத்த வேண்டுமென்றும் தாங்கள் முதன் மந்திரிக்கு யோசனை கூறியிருப்பதாகவும் இதனை முதன் மந்திரி ஓரளவு ஏற்றுள்ளார் என்றும் ஆகையினுல் மாணவர்கள் தங்களது கிளர்ச்சித் திட்டங்களைக் கைவிட வேண்டுமென்றும் அவர்களிருவரும் மேலும் தெரிவித்துள்ளனர்,

கல்லூரிகள் மூடப்பட்டன

மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும், கல்லூரிகளும், உயர்நிலை கல்லூரிகளும் இம்மாதம் வரை மூடப்பட்டுள்ளன.

ரயில் பெட்டிகள் எரிந்து நாசம்

நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் இந்தோ-இலங்கை ரயிலுக்கு மாணவர்கள் தீவைத்ததில் ஆறு பிரயாணிகள் பெட்டிகள் எரிந்து சாம்பலாயின, சென்னையில் இன்று மாலைக்குப் பின்னர் ரயில்கள் யாவும் நிறுத்தப்பட்டன, ரயில் பாதைகள் முழுவதிலும் கற்களும் பெரிய மரங்களும் பரப்பப்பட்டிருந்தன.

1000-க்கும் அதிகமான மாணவர் கைது

நேற்றும் இன்றும் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் ஆயிரத்துக்குமதிகமான மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

12 பகுதிகளில் ராணுவம்

தமிழ்நாட்டில் சுமார் 12 பகுதிகளுக்கு இராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளனர். அவசர அடிப்படை நடவடிக்கை காரணமாக இவர்கள் அழைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டி. டி. கே. சென்னை வந்தார்

மத்திய நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இன்று சென்னை வந்துசேர்ந்தார், மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் அவர் நேரில் பார்வையிட்டார்.

4 ராஜ்யங்களில் ஹிந்தி எதிர்ப்பு

மாணவர்களின் ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இப்பொழுது இந்தியாவின் நான்கு ராஜ்யங்களுக்குப் பரவியுள்ளது. தமிழ்நாட்டில் முதலில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டங்கள் மைசூருக்குப் பரவிய பின்னர் கேரளத்திற்கு விரிந்து இப்பொழுது மேற்கு வங்காளத்தில் தலைகாட்டியுள்ளது. இன்று கல்கத்தாவில் மாணவர்கள் ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் ஈடுபட்டனர். சகல பாடசாலைகளும் இம்மாதம் 15-ம் திகதிவரை மூடப்பட்டுள்ளன.

நந்தா வருத்தம்

சென்னையில் ஏற்பட்டுவரும் உயிர்ச் சேதங்கள் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பெரும் இழப்பாகும் என்று உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால் நந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் மாணவர்களின் ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களினுல் தமிழ்நாட்டில் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனைக் கண்டு நான் மிகவும் வேதனைப்படுகிறேன். ஹிந்தி பேசாத மக்கள் கிளர்ச்சிகளை நிறுத்த வேண்டும் என்றும் திரு. நந்தா தெரிவித்துள்ளார்.

டி. டி. கே, கோரிக்கை

"தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையினுல் தமிழ் மக்கள் தான் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று நிதிமந்திரி திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தெரிவித்துள்ளார். "ஹிந்தியைக் கற்காவிட்டால் பரவாயில்லை தமிழ் மக்கள் மத்திய அரசாங்கத்துடன் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளலாம், மாணவர்கள் தயவுசெய்து கிளர்ச்சியை நிறுத்தவேண்டும்" என்றும் அவர் வானெலி மூலம் பணிவுடன் கேட்டுள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

சித்திர கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்றுடன் முடிவடையவிருந்த சீன சித்திரதீப கண்காட்சி அநேகரின் குறிப்பாக மாணவரின் வேண்டுகோளுக்கிணங்க இன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்றுவரும் இப்பொருட்காட்சியில் பல வண்ண ஓவியங்களும் அற்புத வேலைப்பாடமைந்த, சித்திர விளக்குகளும் வைக்கப்பட்டுள்ளன

களனியில் பொலிஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்களையும், வாங்குகளையும் பெரிய மரக்கட்டைகளையும் வீசி கொழும்பிலிருந்து வரும் ரயில்களைத் தடைசெய்தது.

இச்சம்பவத்தை ஸ்டேஷன் மாஸ்டர் பொலிஸாருக்கு அறிவிக்கவே பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்துவந்து கூட்டத்தை கலைக்க முயற்சித்தனர் என்றும் கூட்டம் கலையாமலிருக்கவே பொலிஸார் குறுந்தடிப்பிரயோகம் நடத்தி பின்னர் கண்ணீர்ப்புகை பிரயோகித்தனர் என்றும் முடிவில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

தமிழ் நட்டுச் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'தமிழ்நாட்டில் நடைபெறும் சம்பவங்களினுல் நான் மனமுருகுகின்றேன் எனது இதயம் புண்பட்டுள்ளது" என்றும் பிரதமர் சாஸ்திரி குறிப்பிட்டார்.

'இரண்டில் எதை விரும்புகிறீர்கள்

தேர்தல் நிச்சயிக்கும்'

யாழ்ப்பாணம், வியாழன்

"இந்ததேர்தலில்மக்கள்முன் இருவேறுடைய கொள்கைகளையுடைய இரு முகாம்கள் போட்டியிடுகின்றன:ஒன்றுமுற்போக்கு கொள்கைகளை உடைய சமசமாஜ - கம்யூனிஸ்ட் - சிறிலங்கா கூட்டணி அடுத்தது மற்றும் கட்சிகள் சகலதுஞ் சேர்ந்த பிற்போக்குவாதிகள் முகாம், இந்த இரண்டில் எதை மக்கள் விரும்புகிறார்கள் என்பதை எதிர்வரும் தேர்தல் மூலம் காட்டவேண்டும்.

இவ்வாறு காங்கேசன் துறைத் தொகுதி கம்யூனிஸ்ட் அபேட்சகர் திரு சி. வைகுந்தவாசனை ஆதரிக்குமுகமாக தெல்லிப்பழை சந்தை மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசுகையில் சமசமாஜ கட்சிப்பிரமுகரும் உடுவில் தொகுதி அபேட்சகருமான திரு. பொ, நாகலிங்கம் குறிப்பிட்டார்

கூட்டத்தில் டாக்டர் கொல்வின் ஆர், டி, சில்வா, திரு வைகுந்தவாசன் உட்பட வேறு பலரும் பேசினர்;

அறிவித்தல்

யாழ்ப்பாண பிரதேசக் கலாமன்றத்தின் நாட்டுப்பாடல், நாட்டுக்கூத்து குழுவினர் ஆதரவில் 15-2-65 இரவு 7 மணி தொடக்கம் 10-30 வரை யாழ். திறந்த வெளியரங்கில் யாழ். நகர முதல்வர் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் நாட்டுக்கூத்துக் கலைஞரும் அண்ணாவிமார்களும் ஒருங்கு சேர்ந்து நடிக்கும்,

நீலகண்டன் அல்லது தேவசகாயம்பிள்ளை என்னும் உண்மைச் சரிதை நாடகத்தைக் காணத்தவறாதீர்கள்,

தயாரிப்பாளர்: [illegible]

(பூந்தான்).

வடபகுதி

சூறாவளி அகதிகளுக்கு இரண்டு லட்சம் உதவி

பதினொரு லட்சம் ரூபாவுக்கு புனருத்தாரண திட்டங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாகாணத்தில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு அரசாங்கம் இதுவரை இரண்டு லட்சம் ரூபாவுக்கு மேலாக நிவாரண உதவி அளித்துள்ளது, யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர், தமது பகுதியில் உள்ள காரியாதிகாரிகள் மூலமாக இதுவரை 2,16,516 ரூபா உதவியுள்ளார்;

பளை, வடமராட்சி காரியாதிகாரி பகுதிகளில் உள்ள பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு புனர் வாழ்வளிக்க 200 வீடுகள் கட்டிக்கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 200 வீடுகளும் 7லட்சம் ரூபா செலவில் கட்டத்திட்டமிடப்பட்டுள்ளது,

கிளிநொச்சி, பூநகரி காரியாதிகாரி பிரிவுகளில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட 209 குடியேற்றவாசிகளின் வீடுகளுக்கு கூரைகள் அமைப்பதற்கு 4 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது,

காரியாதிகாரிகள் பிரிவும் அவைமூலம் அகதிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணநிதி விபரமும் வருமாறு:-

யாழ்ப்பாணம்- ரூ 11, 765, துணுக்காய்- ரூ 10, 100, ஊர்காவற்றுறை- ரூ 28, 542, தெல்லிப்பழை- ரூ 19, 130, கோப்பாய் ரூ 37, 265, சாவகச்சேரி- ரூ 6, 685, பளை- ரூ 20, 219, வடமராட்சி— ரூ 11 650, சங்கானை- ரூபா 3, 150, கிளிநொச்சி- ரூபா 26, 000 பூநகரி- ரூ 25, 000; நெடுந்தீவு- ரூ 17, 100

"தமிழரசு எம். பி. க்கள் சிலர் என்னை தலைமை தாங்க கேட்டார்கள்"

மீசாலைக் கூட்டத்தில் ஜி. ஜி.

கொடிகாமம், வியாழன்

"கடந்த 30 வருடகாலமாக பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தமிழர்கள் மாத்திரமின்றி சிங்களவர்கள் விட்ட சவால்களையும் ஏற்றுத் தமிழ்மக்களுக்குப் பணியாற்றி வந்துள்ளேன்." என்று மீசாலை சந்தையில் நேற்றிரவு சாவகச்சேரி தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. எம். சிவானந்தனை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம் பேசும்போது கூறினர். இக்கூட்டத்திற்கு பெருந்திரளான மக்கள்சமூமகளித்தனர்

திரு. பொ. நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

கடந்தவருடம் சமஷ்டிக் கட்சி முன்னுள் எம். பி.க்கள் சிலர் எனது வீட்டிற்கு வந்து தமிழினம் ஆபத்திலிருப்பதாகவும் என்னை தலைமை தாங்கும் படியும் கேட்டார்கள். இதை பொதுமேடையொன்றில் சத்தியம் செய்து அவர்கள் மறுத்தார்களானுல் நானும் தமிழ்க் காங்கிரஸ அபேட்சகர்களும் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளதயாராகஇருக்கிறேம் நான் பாராளுமன்றம் போக விருப்பப்பட்டு இத்தேர்தலில் போட்டியிடவில்லை, தென்னிலங்கையில் என்னை போட்டியின்றிப் பாராளுமன்றம் அனுப்பத் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஒரேமுகமாக முன்வந்தார்கள். ஆனல் நான் மறுத்து யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் காரணம் இதுதான். தமிழனின் நிலைமை வரவர மோசமாகிக் கொண்டிருக்கிறது, இதற்காக நான் போராட முன்வராவிட்டால் எதிர்கால சந்ததியினர் என்னைத் தூற்றுவார்கள்.

சாவகச்சேரி தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. எம். சிவானந்தன் பேசும்போது கூறியதாவது:-

நான் இத்தொகுதி அங்கத்தவனுகத் தெரிவு செய்யப்பட்டால், என் வழக்கறிஞர் தொழிலையும் விட்டு, தமிழ்க் காங்கிரஸின் முழுநேர ஊழியனுகக் கடமையாற்றி, தமிழ் உரிமை பெறப் பாடுபடுவேன். பாராளுமன்றம் நடைபெறும் தினங்களைத் தவிர மற்றும் நாட்களில் மக்கள் மத்தியிலேயே வாழ்ந்து தொண்டாற்றுவேன்.

உணவருந்தியபின் மயக்கமுற்றனர்

யாழ்ப்பாணம் பொலிஸ் விடுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 5 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் நேற்று மத்தியான உணவருந்திய சிறிது நேரத்தில் மயக்கமுற்றதன் காரணமாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டனர்,

இவர்கள் பொலிஸ் உணவு விடுதியிலேயே உணவருந்தினர்கள், இந்த உணவில் நஞ்சூட்டப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

இதுசம்பந்தமாக விசாரணை நடைபெற்றுவருகிறது.

இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் நல்லூர் சாதனு பாடசாலையில் கடமையாற்றிய பயிற்றப்பட்ட ஆசிரியை திருமதி பத்மாவதி பாக்கியராஜா இம்மாதம்15-ம் திகதி முதல் கொள்ளுப்பிட்டி பெண் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்;

⁂ ⁂ ⁂

நிலாவெளி முஸ்லிம் பாடசாலையில் கடமையாற்றிய திருமதி லீலா அழகுதுரை இம்மாதம் 15-ம் திகதி முதல் கொழும்பு வெள்ளவத்தை முஸ்லிம் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்,

⁂ ⁂ ⁂

நிலாவெளி மெதடிஸ்த தேவாலயத்தில் கடமையாற்றிய சுவிஷேஷகர் எஸ், டி. அழகுதுரை கடந்த முதலாம் திகதி முதல் கொழும்பு புறக்கோட்டை மெதடிஸ்த தேவாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்,

---

பம்பலப்பிட்டி, வியாழன்

நேற்று மாலை 5 மணியளவில் களனமுல்லையில் இரு ரயில்கள் மோதிக்கொண்டதால் பல பிரயாணிகள் காயமடைந்தனர்.

இதுசம்பந்தமாக இரு ரயில்வே கார்டுகள் விசாரணை செய்யப்படவிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org